



Confirmation, Akkrapalayam


Jubilee, Confirmation, Anilady



Renovated Church blessing, Vadakaraithayanur, Thirukoilur


St. Antony's School, Neyveli

**The Holy Father's Prayer Intentions for July 2024**
**For the Pastoral Care of the Sick –** We pray that the Sacrament of the Anointing of the Sick confer to those who receive it and their loved ones the power of the Lord and become ever more a visible sign of compassion and hope for all.



# ARCHBISHOP'S MESSAGE



Dear Rev. Fathers, Brothers, sisters and my dear people

This month I would like to reflect with you on the important aspect of our life and Mission as the People of God; the Holy Catholic Church; the Mystical Body of Christ; a vibrant faith community whose faith is centered on faith in Jesus Christ. In this I prefer to be more on the practical side than dealing with theological implications.

When we generally evaluate the life of the Church in today's context, we can note that it is slowly becoming more worldly and secular, more ritualistic leading to a kind of superstitious beliefs, externalism taking the upper hand, blindly following traditional customs and practices, empty devotions, beliefs and practices not having any effect on one's life and relationships, namesake Christians having no gospel values in their life, Clergy and religious losing credibility due to immoral life and financial irregularities, craving for power and positions during the liturgical services, domination by village heads, simply imitating the lifestyle of politicians such as extraordinary welcome and thanksgiving ceremonies in the sanctuary itself, making the church as mere auditorium and the celebration of the Holy Eucharist as a mere social function, losing the sacredness of the Divine milieu and





the sacramental character. Due to all these people are deprived of the real God experience and the spiritual depth of their beliefs. As a result they are left high and dry, dissatisfied, quarrelsome, divisive and faithless. In many Parishes due to the domination of village heads, the Priests are not able to form Parish councils which are mandatory by Vat.II more than 50 years before. They love to celebrate annual feasts sometimes more than once a year with flag hoisting, Novena days, car procession, fireworks, with more number of bishops and priests, which becomes a show of power, position, authority, superiority, pomp and show, also a time for getting more money collections etc. Then instead of following the explicit command of Jesus to build faith communities who are to be Good news to others and true witnesses of the Risen Lord and His Gospel, we build expensive, ornamental, architectural, sky reaching churches, grottos, shrines, flag posts etc etc. Though amidst all these, some spiritual benefits are there, the worldliness outweighs it.

In all these, the purpose of being a Christian is undermined and neglected. Instead of being 'Salt' and 'Leaven' we become a separate entity with power and influence posing threat to other communities. That is why Pope Francis emphatically says that I do not want namesake Christians in whose life the Gospel values are not seen, but I want Christians to be "Missionary Disciples." A disciple is the one who sits at the feet of the Master listening to him, learning from him, imitating him and finally become like him. When that disciple starts going to others and starts sharing his life and experience with others he becomes a Missionary Disciple. This is what Pope Francis wants a Christian to be. A Christian is a Spirit-filled and Spirit-led person. But unfortunately there are some Priests who, not knowing the role of Laity in the Church, treat them as mere spectators, reducing them to be silent and passive participants in liturgical celebrations, sometimes because of the dominating choir, the people do not anymore sing and respond to prayers. According to Sacrosanctum Concilium "Active Participation" is the norm of every Liturgical celebration.

Sometimes due to the over-focus of the celebrant, [the bishop or the priest] the Laity fail to realize that they too are offering the Holy Eucharist together with the Celebrant who presides over as a minister. The people of God offering the Holy Eucharist due to their sharing in the common priesthood by virtue of their Baptism and the Priest ministering due to his ministerial priesthood. Clericalism has destroyed this aspect of the worshipping community as People of God where the Priest presides over as minister of the people of God. In the effort of Pope Francis to make the Church a Synodal Church, this reality of the Church as People of God where the ordained ministers are only servants of the People of God becomes clear. Thus the need of recognizing the very important role of the Laity in the Church, is the need of the time.

The Second Vatican Council's teachings on Laity are intimately related with its teachings on Mission of the Church in general. Since Mission is intimately connected with Vision, we need to bring out also the Council's new vision of Church.

The very purpose of convening of the Second Vatican Council by Pope St. John XIII was to bring about renewal of the Church in all respects. Accordingly the traditional understanding of the Church was revamped in the light of Biblical sources, re-defining Church's identity and mission.

The Laity are gathered together in the People of God and make up the Body of Christ under one head, a participation in the salvific mission of the Church itself. Through their Baptism and Confirmation all are commissioned to that apostolate by the Lord Himself. Moreover by the Sacraments, especially Holy Eucharist, that Charity toward God and man which is the soul of the apostolate is communicated and nourished. Now the Laity are called in a special way to make the Church present and operative in those places and circumstances where only through them can it become the salt of the earth. LG 33.





Further quoting Lumen Gentium, the Pope reminds the Clergy that the Church is "the People of God", whose identity is the dignity and the freedom of the children of God, in whose hearts dwells the Holy Spirit as in a temple. LG.9. From this then draws out his point that the faithful, Holy People of God is anointed with the grace of the Holy Spirit and thus as we the Clergy reflect, think, evaluate, discern, we must be very attentive to this anointing. As against the Pastors, Clergy and the Bishops who assume that they alone are consecrated people; Pope Francis urges them to see Baptism as the primary Sacrament on account of which the whole Church has been consecrated as the People of God. Thus the Pope says, it is good for the Pastors to look to the faithful, Holy People of God, and to feel themselves an integral part of the same.

In 'Christifideles Laici' Pope St. John Paul II says, "the foundation for the dignity and mission of the Lay Faithful is the 'radical newness' of the Christian life that comes from Baptism."[No. 10.] Accepting the Synod's call to describe the Lay Faithful in positive terms, the Pope insists that only by acknowledging the richness of the mystery of Baptism can a basic description of the Laity be achieved. [no.9.] The call to holiness is universal and is rooted in Baptism; in fact, "the vocation to holiness" is an essential element of the new life of Baptism [no. 17.] It is the vocation and mission of the Lay faithful- precisely as Church members- to proclaim the Gospel [no. 33.], and to take an active, responsible role in the world's re-evangelization. [no. 64]

Thus it is the prime duty of the Priests to make the people to realize, understand and experience the greatness and importance of the Sacrament of Baptism by virtue of which they become "the People of God" Do the Priests as ministers celebrate the sacrament in such a way that people truly become aware of what takes place and the effect of it in their lives? When a child or an adult is baptized, what happened to Jesus at Jordan happens

here and now. The heavens open , the Holy Spirit comes down upon and the Heavenly Father owns the child as "this is my beloved son/daughter". At that time four remarkable changes take place in the recipient of the sacrament of Baptism. 1, All sins are forgiven and made holy. 2, Becomes the Child of God and gets the right to call God as Abba Father. 3, Becomes the Temple of the Holy Spirit and the dwelling of God. 4, Becomes the member of the Church [the Mystical body of Christ.] In the celebration of the sacrament of Baptism do we make the people to realize and experience these graces that take place which becomes the foundation of Christian life. First of all are we aware of it? If so we would celebrate it in a more meaningful and devout way. If this is not realized and experienced how can we expect the people to live these realities that happens at Baptism. It is high time for us to realize and make the people to realize what it means to be a Christian.

As Eve was created from the bone taken from the side of Adam, the Holy Mother Church was born from the side of Jesus. Jesus' side was pierced by the lance and water and blood flowed from His side. Water symbolizes the sacrament of Baptism by which a Christian is born, and blood signifies the sacrament of the Holy Eucharist which nourishes the Christian, born of the sacrament of Baptism. The pertinent question today before us is, "Does the celebration of the Holy Eucharist truly nourishes the faithful who participate? Or I put it this way, the way the Holy Eucharist is celebrated today in our Churches, do the faithful get truly nourished? For this we must create a proper atmosphere and dispositions and following faithfully the Liturgical guidelines and instructions given by the Church. Remember the words of the great saint St. John Mary Vianney, "The Holy Eucharist is the greatest gift of God to Mankind". It is truly the body and blood of Jesus Christ, the source and summit of the life of every Christian. Thus we need to celebrate it meaningfully and devoutly





in order that it becomes the nourishment of every Baptized Christian.

First of all we must avoid all that distracts the faithful from their concentration on the mystery of the Holy Eucharistic sacrifice. Unnecessary decorations, too many flowers, illuminations are to be avoided. The Altar symbolizes Christ. That's why the Priest begins and ends the Holy Eucharist by kissing and venerating the altar. The altar should be simple, covered by white cloth and not by plastic. It should be visible to the faithful and not covered by decorations. If there is a crucifix in the sanctuary then the small crucifix should not be placed on the altar. The sacred gifts on the altar should be visible to the faithful. As we begin the Mass, too many and prolonged introductions, welcome ceremonies at the sanctuary even for a Bishop be avoided. Here together with the celebrant we are all people of God. No one needs a welcome. We need to welcome Jesus in our midst. Realizing his presence, we immediately become aware of our unworthiness and so the penitential rite. Then the Lord speaks to us through the Readings, Gospel and the homily. We respond to it through the responsorial psalm. All the faithful should respond to prayers and singing. Remember the "Active participation" is the main thrust of the Liturgical renewal. The choir should not dominate. It should accompany the people and help them to sing. Sometimes the choir becomes an orchestra and people become mere audience and spectators and the Holy Mass is made a theatre function. The choir should not dominate and only those hymns which all know and can sing, be chosen. As far as possible the proclamation of the Word and the homily be given from the Lectern and not from the altar to distinguish the Table of the word and the Table of the Eucharist. People should be helped to realize that they, with the celebrant are offering the Holy Eucharist. Sometimes they think that the priest alone offers and they are just participating. They should be helped to concentrate on the prayers of the Preface, consecration, Eucharistic prayers etc.

Once the communion service is over the choir should stop singing and the people should be helped to welcome Jesus into their hearts and thank Him in silence. After communion prayer and blessing, then again the thanking and felicitating ceremony with shawls at the sanctuary is to be avoided. With all these, one forgets the Lord who has come into the hearts. We must realize that all the while the Lord has been waiting for us. Jesus says, "I have earnestly desired to eat this Passover with you before I suffer." We came to meet that Jesus who has been waiting for each one of us to come into our hearts and to be our constant companion. After the final blessing and the concluding hymn, we are supposed to take Jesus with us to our homes. We should be aware of him as St. Paul says, "It is no longer I but it is Christ who lives in me." After Mass when we meet and greet people we must be able to experience that communion and then take Jesus to home. As we go home we should talk to him who is with us just like the disciples on the way to Emmaus. We must tell him this is the way to my home; after reaching we tell him this is my home and then introduce every member to Him. If anyone is sick or in problem or in any need we can tell Jesus. What a wonderful life of communion with Jesus. This is what the Holy Eucharist does to us. We get strengthened; we become filled with His Spirit and all the gifts and fruits of the Holy Spirit. The Risen Jesus who has come into us though the Holy Eucharist is the one who has overcome the world, sin, Satan, self, death, sickness, failure etc. When we continue to live in communion with the Lord, we, with Him are able to conquer all these in our lives. We will be able to become aware and live the realities of our Baptism. We will be Missionary disciples as Pope Francis desires and we will live synodally and the Church will become Synodal.

**+ Francis Kalist**

*Archbishop of Pondicherry - Cuddalore*





**அன்புக்குரிய அருட்பணியாளர்களே! இருபால் துறவோரே! பொதுநிலையினனரே!**

உங்கள் பேராயரிடமிருந்து உங்களுக்கு என் வணக்கமும் வாழ்த்தும்.

இம்மாதம், இறைமக்கள் என்ற முறையில் நம் வாழ்வு மற்றும் பணி ஆகியவற்றின் மிக முக்கியமான அம்சங்களைப்பற்றி உங்களோடு இணைந்து சிந்திக்க விரும்புகிறேன், புனித கத்தோலிக்க திருஅவை, கிறிஸ்துவின் மறையுடல்; இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையை மையப்படுத்திய, உயிர்த்துடிப்புள்ள ஒரு நம்பிக்கைக் குழுமம். இவற்றின் இறையியல் அடித்தளங்களின் பகுதியின்மீது கவனம் செலுத்துவதைவிட அவைகளின் நடைமுறைகளுக்கு முன்னுரிமை கொடுக்க விரும்புகிறேன்.

இக்காலச் சூழமைவில், பொதுவாக, நாம் திருஅவையின் வாழ்வை ஆய்வு செய்கின்றபோது, பின் வருபவைகள் நமக்கு புலப்படுகின்றது. படிப்படியாக இது புவிசார்புடையதாகவும் உலக சார்புடைத் தன்மையுடையதாகவும் சடங்கு சம்பிரதாயங்களைச் சார்ந்ததாகவும், மூடநம்பிக்கைகளை நோக்கிச் செல்வதைப் போலவும், புறநிலைமைப்போக்கு உயர்ந்திருப்பதாகவும், பாரம்பரிய பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாக பின்பற்றுவதாகவும். ஒருவருடைய தனி நபர் வாழ்விலும், உறவுகளிலும் எந்தவிதமான விளைவுகளை ஏற்படுத்தாத வெற்று பக்திமுயற்சிகள், நம்பிக்கைகள், நடைமுறைகளை உடையதாகவும், நற்செய்தி மதிப்பீடுகளையுடைய வாழ்வறில்லாமல் பேரளவுக்கு கிறிஸ்தவர்களாகவும் வாழ்கின்றோம். தங்களுடைய அறநெறிமதிப்பீடுகளற்ற வாழ்வாலும். நிதி முறைகேடுகளாலும் தங்ளின் நம்பகத்தன்மையை இழந்த குருக்கள் துறவோரை உடையதாக இருக்கிறது. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் முக்கிய இடத்திற்காகவும் அதிகாரத்திற்காகவும் ஏங்குபவர்களாகவும், கிராம தலைவர்களின் ஆதிக்கம் நிரம்பியதாகவும், உணர்தும் திருவழிப்பாட்டுத் திருப்பீட முற்றத்தில் அரசியல் வாதிகளின் வாழ்வுமுறையை அப்படியே பின்பற்றுகின்ற வகையில் அசாதாரணமான வரவேற்பு மற்றும் நன்றியுரை கொண்டாட்டங்களை, நடத்தி ஆலயத்தை வெறும் அரங்குகளாக

மாற்றுவது, நற்கருணை கொண்டாட்டத்தை ஒரு வெறும் சமூகக் கொண்டாட்டமாக மாற்றுவது, இறை இருப்பிட புனிதத்தையும் அருமையான இயல்பையும் இழந்துகொண்டிருக்கும் நிலைமை போன்றவைகள் நமக்கு தென்படுகின்றன.

இவைகளினால் மக்கள் உண்மையான இறையனுபவத்தையும், தங்கள் நம்பிக்கை கோட்பாடுகளின் ஆழத்தையும் இழந்துநிற்கின்றார்கள். இதன் விளைவாக மக்கள், வரட்சியில் உள்ளார்கள்; தனிமைப்படுத்தப்பட்டுள்ளர்கள்; அதிருப்தியிலுள்ளனர் இதனால் அவர்கள் சச்சரவுசெய்வர்களாகவும், பிரிவினையாளர்களாகவும, நம்பிக்கையற்றவர்கள்காளகவும் மாறுகின்றார்கள். பல பங்குகளில் கிராமத் தலைவர்களின் ஆதிக்கத்தால், 50 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட பங்கு அருட்பணிப் பேரவைகள் துவங்க முடியாமல் உள்ளது. அவர்கள் மிகுதியான பண வரவை கணக்கிட்டு, அதிக எண்ணிக்கையில் ஆயர்கள் குருக்களை வரவழைத்து, தங்களுடைய வலிமை, சமூக அந்தஸ்து, அதிகாரம், உயர்நிலை ஆடம்பரங்கள் இவைகளை வெளிப்படுத்த, கொடியேற்றம், நவநாள். தேர் பவனி, வானவேடிக்கை போன்றவைகள் உள்ளடங்கிய ஆலய விழாக்களை ஆண்டிற்கு ஒருமுறை (அ) இருமுறையும் கொண்டாடுகிறார்கள்.

இயேசுவின் வெளிப்டையான ஆணைகளைப் பின்பற்றி அவருடைய நற்செய்தியை பறைசாற்றும் நம்பிக்கை சமூகங்களை கட்டியெழுப்புவதற்கு பதிலாக, நாம் ஆடம்பர, அலங்கார கலைநுணுக்கம் நிறைந்த, வானை முட்டிய கோபுரங்களையுடைய ஆலயங்களையும், குடைவுக் குகைக் கோயில்களையும், திருத்தலங்களையும், உயரமான விலையுயர்ந்த வெள்ளி (அ) வெண்கல கொடிமரங்கள் போன்றவைகளையும் கட்டியெழுப்புகிறோம். இவைகளின் ஊடாக சிறிது ஆன்மீக நலன்கள் உண்டு என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் உலகு சார்பியல் இவைகளுக்கு மேலாக உயர் அழுத்தம் பெற்றதாக உள்ளது.

இவைகளால் கிறிஸ்தவர்களாக இருப்பதின் நோக்கம், குறைமுக்கியம் கொடுக்கப்படுகின்றது (அ) புறம் தள்ளப்படுகிறது. உலகின் ''உப்பாகவும்'' ''புளிக்காரமாகவும்'' இருப்பதற்கு பதிலாக பிற





சமூகங்களுக்கு அச்சமூட்டுகிற அதிகாரமும் செல்வாக்கும் பெற்ற தனி அமைப்பாக மாறுகின்றோம். இதனால்தான் திருத்தந்தை நற்செய்தி விழுமியங்கள் வெளிப்படாத பெயரளவு கிறிஸ்தவர்கள் எனக்குத் தேவையில்லை, மாறாக நற்செய்தி தூதுவர்களான''சீடர்கள் எனக்குத் தேவை'' என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

யார் ஒருவர் கிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்து அவருக்கு செவிமடுத்து, அவரோடு ஒப்பிட்டுப்பார்த்து இறுதியாக அவரைப்போல இருப்பவர்தான் அவருடைய சீடர். எப்பொழுது அவர் பிறரிடம் சென்று அவருடைய வாழ்வையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்ள தொடங்குகிறாரோ அப்பொழுதுதான் அவர் ''நற்செய்தித் திருத்தூதராக'' மாறுகிறார். இப்படித்தான் ஒரு கிறிஸ்தவர் இருக்க வேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிஸ் விரும்புகிறார். ஒரு கிறிஸ்தவர் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டவர்; தூய ஆவியாரால் வழி நடத்தப்படுபவர்; ஆனால் சில குருக்கள், திருச்சபையில் பொதுநிலையினரின் பங்கேற்பை அறிந்து கொள்ளாமல், அவர்களை வெறும் பார்வையாளர்களாகவும், வெறும் செயலற்ற மற்றும் அமைதியான பங்கேற்பாளர்களாகவும்திருவழிபாட்டு நிகழ்வுகளில் நடத்துகின்றார்கள். சிலவேளைகளில் பாடற்குழுவின் மேலாதிக்கத்தினால் மக்கள் பாடுவதில்லை; செபங்களுக்கு பதிலளிப்பதுமில்லை. திருவழிபாடு பற்றிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கஏடு குறிப்பிடுவதைப்போல ''செயலூக்கம் பெற்ற பங்கேறபு திருவழிபாட்டு கொண்டாட்டத்தில் பொது நெறியாகும்''.

சில நேரங்களில் திருப்பலியை தலைமையேற்று நடத்துகின்ற ஆயர் மற்றும் குருக்களுக்கு தகுதிக்கு அதிகமானகவன முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால், அவர்கள் நற்கருணை கொண்டாட்டத்தின் பணியாளர் என்ற முறையில் தலைமை ஏற்பவராகவும் தாங்கள் அவருடன் இணைந்து நற்கருணை ஒப்புக் கொடுக்கிறோம் என்பதை உணர தவறுகிறார்கள். ஒட்டுமொத்த இறைமக்களின் கொண்டாட்டமே நற்கருணை கொண்டாட்டம். அதில் திருமுழுக்கினால் கிறிஸ்துவின் பொது குருத்துவத்தில் பஙகேற்கின்ற பொதுநிலையினரும், அதே கிறிஸ்துவின் பணிக்குருத்துத்தில் பங்கெடுக்கின்ற குருக்களும் இணைந்து கொண்டாடுகிறார்கள். திருப்பணியாளர் சார்பு வாத சித்தாந்தம், இறைமக்களின் பணியாளர் என்ற முறையில் குருக்கள்

இறைமக்களின் வழிபாட்டு குழுவில் தலைமையேற்கிறார்கள் என்ற அம்சத்தை சிதைத்துவிட்டது.

திருத்தந்தை பிரான்சிஸ் திருச்சபைகூட்டொருங்கியக்கத் திருஅவையாகியதால் அவர்களின் பெரு முயற்சியால் திருப்பொழிவுச் செய்யப்பட்ட பணியாளர்கள் இறைமக்களின் பணியாளர்களே என்பது தெளிவாகிறது. இவ்வாறு திருச்சபையில் பொதுநிலையினரின் பங்கேற்பின் முக்கியத்துவத்தை அங்கிகரிக்க வேண்டிய தேவை என்பது இக்காலத்தின் தேவையாக உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொதுநிலையினரைப் பற்றிய போதனைகளை, திருச்சபையில், நற்செய்தி அறிவிப்பு என்ற பொது போதனையோடு மிக நெருக்கமான உறவைக் கொண்டுள்ளார். நம்முடைய நற்செய்தி அறிவிப்புப்பணி திருச்சபையின் இலட்ச்சியப் பார்வையோடு மிக நெருக்கமாக இணைக்கபட்டுள்ளதால் திருச்சபையைப் பற்றிய புதிய இலட்சிசியப் பாாவையையும் வெளிக் கொண்டுவர வேண்டிய தேவையும் உள்ளது.

புனித இருபத்து மூன்றாம் அருளப்பர், இரண்டாம் வத்திகான் சங்கத்தை கூட்டியதின் நோக்கமே திருச்சபையில் எலலா மட்டங்களிலும், தளங்களிலும் ஒரு புதுப்பித்தலை கொண்டுவருவதற்கே. எனவே, விவிலிய ஆதாரங்களின் (அ) மூலங்களிலிருந்து திருச்சபையின் தன்மையையும் (அ) அடையாளத்தையும், பணியையும் பற்றிய புதிய வரையறைகளோடு திருச்சபையைப் பற்றிய பாரம்பரிய பதில்களை மறுவறை செய்யப்படடுள்ளன. ஒரே தலைமையின் கீழ் திருச்சபையின் மீட்புப்பணியில் பங்கேற்று கிறிஸ்துவின் உடலை உருவாக்க பொதுநிலையினர் இறைமக்களாக ஒன்று கூட்டப்படுகின்றனர்.

திருமுழுக்கு, உறுதிபூசுதல் வழியாக பொதுநிலையினர் எல்லோரும் அப்போஸ்தலிக்கத் திருத்தூதுப் பணியில் நம் ஆண்டவராலேயே ஆணையிடப்பட்டுள்ளார்கள். மேலுமாக, அருளடையாளங்கள் வழியாக, சிறப்பாக புனித நற்கருணை அருளடையாளத்தால், திருத்தூதுப் பணியின் இதயமாக உள்ள, இறைவனோடும் மனிதரோடும் உள்ள அன்புறவுப்பணி வழங்கப்படுகிறது மற்றும் வளர்க்கப்படுகிறது. எனவே, திருச்சபையைப்பற்றிய இரண்டாம் பொது வத்திக்கான் சங்கஏடு எண். **33**இல் குறிப்பிடப்படுவதைப்போல, எங்கெல்லாம் பொதுநிலையினரால்





மட்டுமேதிருச்சபை உலகின் ஒளியாகபிரசன்னப்படுத்தப்படவும் செயல்படவும் முடியுமோ, அங்கெல்லாம் திருச்சபையைக் கொண்டுசெல்ல பொதுநிலையினர் சிறப்பு அழைப்பைப் பெறுகின்றார்.

மேலும், அதே சங்க ஏட்டை மேற்கோளிடும் வகையில் திருத்தந்தை, திருச்சபை என்பது ‘‘இறைமக்களே’’. இன்னும் கூடுதலாக ‘‘மக்களின் ஒளி’’ என்ற ஏட்டில், எண் **9**இல் திருத்தந்தை’’, திருச்சபை என்பது இறை மக்களே; அவர்கள்இறைவனின் பிள்ளைகள் என்பதுதான் அவர்களின் அடையாளமும் மாண்பும். ஏனென்றால் ஆலயத்திற்குள் முன் தூய ஆவியார் வாழ்வதைப்போல பொதுநிலையினரின் இதயங்களிலும் குடிகொண்டுள்ளார்’’ என்று திருப்பணிகளுக்கு திருத்தந்தை நினைவூட்டுகிறார். இதிலிருந்து, அவர், நம்பிக்கையாளர்கள் கடவுளின் புனித மக்கள், தூய ஆவியாரின் அருளாள் திருப்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்ற புள்ளிக்கு திருப்பணியாளர்களை மற்றும் ஆயர்களை சிந்திக்கசெய்ய தியானித்து, சீர்தூக்கிப்பார்த்து, கூர்ந்துணர்ந்து பொதுநிலையினரின் திருப்பொழிவிற்கு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்ற சிந்தனைக்கு அவர்களைஈர்க்கின்றார்.

மேய்ப்புப்பணியிலுள்ளோர், திருப்பணியாளர்கள், ஆயர்கள் தாங்கள் மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்ற சிந்தனையைப் பற்றிக்கொண்டு உள்ளோரை, திருத்தந்தை பிரான்சிஸ் தொடக்கநிலை அருளடையாளமாகிய திருமுழுக்கின் வழியாக மட்டுமே ஒட்டுமொத்த திருச்சபையும் இறைமக்கள் என்ற நிலைக்கு திருப்பொழிவு செய்யப்பட்டுள்ளது என்பதை உற்று நோக்க தூண்டுகிறார். எனவே திருத்தந்தை, இறைமக்களை, நம்பிக்கையாளர்காளகவும். இறைவனின் புனித பிள்ளைகளாகவும் பார்க்கவும், அவர்களோடு தாங்கள் ஒருங்கிணைந்த பகுதி என்றும் உணர்ந்து பார்த்துச் செயல்படுவது திருப்பணியாளர்களுக்கு நல்லது என்று கூறுகிறார்.

‘‘கிறிஸ்துவின்பொதுநிலையினர்’’ என்ற மடலில் எண் **10**இல் திருத்தநதை புனித இரண்டாம் அருள் சின்னப்பர், திருமுழுக்கின் வழியாக, கிறிஸ்துவ வாழ்வின் வேர்நிலையில் புதுப்பித்தல்தான் நம்பிக்கையாளர்களாகிய பொது நிலையினரின் மாண்புகள் மற்றும் திருப்பணியின் அடித்தளம்’’என்று குறிப்பிடுகின்றார். மேலும் நேர்மறை

சிந்தனைகளோடு, கூட்டொருங்கியக்க அழைப்பை ஏற்றுக்கொண்டு, திருமுழுக்கின் மறைபொருளாகிய வளமையை வளர்த்தால்தான் (அ) ஏற்றுக் கொண்டால்தான் பொது நிலையினர் திருமுழுக்கின் அடித்தள விளக்கங்களை நிறைவுக்குக் கொண்டுவர முடியும் என்றுரைக்கிறார் நம் திருத்தந்தை(எண். 9). புனிதத்திற்கான அழைப்பு உலகளாவியது;திருமுழுக்கில் வேறூன்றியுள்ளது; உண்மையாகவே ''புனிதத்திற்கான அழைப்பு,இன்றியமையாதது; திருமுழுக்கின் புதிய வாழ்வின் இன்றியமையாதக் கூறு'' (எண. 17) குறிப்பாக திருஅவையின் உறுப்பினர்கள் என்ற முறையில் நற்செய்தி அறிவிப்பு என்பது பொது நிலையினரின் அழைப்பும் பணியாகும் (எண். 33).

மேலும் உலகிறகு மறு நற்செய்தி அறிவிப்பதில் பொதுநிலையினர் துடிப்பான, பொறுப்புள்ள பங்கெடுக்க வேண்டும். எனவே திருமுழுக்கு என்ற அடையாளத்தால் ''இறைமக்கள் ஆகிறார்கள்''என்பதை உணர்ந்து, புரிந்துகொண்டு மாண்பையும் பெருமையையும் அனுபவிக்கச் செய்வதுதான் ''குருக்களின் தலையாயக் கடமை / முதன்தை கடமை''. ஆனால், உண்மையிலேயே குருக்கள் அருளடையாளங்களைக் கொண்டாடும்போது, என்ன நடக்கிறது, அது தங்கள் வாழ்வில் கொணரும் விளைவுகள் என்ன? என்பதை உணர்ந்து கொள்ளும் வகையில் அவைகளை குருக்கள் கொண்டாடுகிறார்களா? ஒரு குழந்தையோ (அ) முதியவரோ திருமுழுக்கு பெறுகின்றபோது, யோர்தான் ஆற்றில் இயேசுவுக்கு என்ன நடந்ததோ அது இங்கே, இப்போது நடைபெறுகின்றது. வானம் திறக்கிறது, அவர்கள்மீது தூய ஆவியார் இறங்குகிறார், விண்ணகத் தந்தை ''இவரே என் அன்பார்ந்த மகன் / மகள்'' என்று கூறி அவர்கள் மீது சொந்தம் (அ) உரிமை பாராட்டுகிறார். இவ்வேளையில் திருமுழுக்கு பெறுவோரிடம் நான்கு மாற்றங்கள் உருவாக்குகின்றன.

1. அவருடைய அனைத்து பாவங்களும் மன்னிக்கப்பட்டு புனிதமடைகிறார்.

2. இறைவனின் பிள்ளையாக மாறி இறைவனை ''அப்பா தந்தையே'' என்று அழைக்கும்

உரிமையை பெறுகிறார்.





3. தூய ஆவியாரின் ஆலயமாகிறார் இறைவனில் குடியிருப்பாக மாறுகிறார்.

4. கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையின் உறுப்பாகிறார்.

எனவே திருமுழுக்கு அருளடையாளக் கொண்டாட்டத்தின்போது, இறைமக்கள் இந்த கிறிஸ்துவ வாழ்வின் அடித்தளமாகிய அருளைபெற்று அனுபவிக்க வைக்கிறோமா? முதலில் நாம் இதை உணர்ந்திருக்கிறோமா? ஆம் என்றால், நாம் நிச்சயமாக இவற்றை முழு அர்த்தமுள்ள வகையிலும் பக்தியான முறையிலும் கொண்டாடுவோம். இவைகளை நாம் உணராமலும் அனுபவிக்காமலும் இருந்தால், இறைமக்கள், எவ்வாறு திருமுழுக்கில் இடம்பெறும் இவ்வுண்மைகளைவாழ வேண்டும் என்று எதிர்பார்க்க முடியும்? எனவே 'கிறிஸ்தவராக' இருப்பது என்றால் என்ன என்பதை நாம் உணரவும், மக்களை உணரவைக்க வேண்டிய மிகத் தகுந்த நேரம் இது.

ஆதாமின் விலா எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பிலிருந்து ஏவாள் படைக்கப்பட்டதைப் போல, இயேசுவின் விலா எலும்பிலிருந்து திருச்சபை பிறந்தது. இயேசுவின் விலா ஈட்டியால் குத்தப்பட்டது; இரத்தமும் நீரும் வழிந்தோடியது. திருமுழுக்கினால் கிறிஸ்துவராக பிறக்கிறோம்என்பதற்கு தண்ணீர் ஒரு அடையாளம்; இரத்தம், திருமுழுக்கினால் பிறந்த கிறிஸ்துவரை உணவூட்டி வளர்க்கும் புனித உணவாவதற்கு நற்கருணை அடையாளம். இப்பொழுது மிகவும் தொடர்புள்ள கேள்வி நம்முன் வைக்கப்படுகிறது. ''தூய நற்கருணைக் கொண்டாட்டம் உண்மையிலேயே பங்கெடுக்கும் நம்பிக்கையாளர்களுக்கு அதிக ஊட்டமளிக்கிறதா?''அல்லது இந்த கேள்வியை இப்படி கேட்கிறேன், ''புனித நற்கருணை நம் ஆலயங்களில் கொண்டாடப் படுகின்றன. நம் நம்பிக்கையாளர்கள் உண்மையிலேயே ஊட்டம் பெறுகின்றார்களா?

இந்த நற்கருணை ஊடம் அளிக்க வேண்டுமென்றால் திருச்சபை வழங்குகின்ற திருவழிபாட்டு வழிகாட்டுதல்களையும், அறியுறுத்தல்களையும், பிரமாணிக்கத்துடன் கடைபிடித்து, சரியான சூழலையும் ஏற்புடையமையையும் உருவாக்க வேண்டும். மிகப்பெரிய புனிதராகிய ஜான் மரிய வியான்னியின் வார்த்தையை நினைவுக்கு

கொண்டுவருவோம், “புனித நற்கருணை மனித சமுதாயத்திற்கு இறைவன் வழங்கிய மாபெரும் கொடை; உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தமே ஒவ்வொரு கிறிஸ்துவனின் வாழ்வின் ஊற்றும் எழுச்சியுமாகும்”. எனவே ஒவ்வொரு திருமுழுக்குப்பெற்ற கிறிஸ்தவனுக்கும் ஊட்டமளிக்கும் உணவாக நற்கருணை மாற அதை பக்தியாகவும் அர்த்தமுள்ள முறையிலும் கொண்டாட வேண்டும்.

அனைத்திற்கும் முதலாக, புனித நற்கருணை பலியின் மறைபொருளின்மீது ஒருமுகப்படுத்துதலை கவனச் சிதைவு செய்யும் அனைத்தையும் தவிர்க்க வேண்டும். தேவையில்லாத அலங்காரங்கள், மிகுதியான மலர்கள், வண்ண ஒளி ஆடம்பரங்கள் போன்றவைகள் தவிர்க்கப்பட வேண்டும். திருப்பலி மேடை (அ) பீடம் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றது. எனவேதான் புனித நற்கருமண கொண்டாட்டத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் குரு அதை முத்தமிட்டுகிறார். எனவே பீடம் எளிமையான இருக்க வேண்டும். வெண்துணியால் மூடப்பட்டிருக்க வேண்டும். பிளாஸ்டிக் (அ) நெகிழ்வுத் தாளால் மூடப்பட்டிருக்ககூடாது. அதேபோல் பீடம் நம்பிக்கையாளரின் கண்களுக்குபட வேண்டும். அலங்காரங்களினால் மறைக்கக் கூடாது. திருப்பீட முற்றத்தில் பாடுபட்ட சிலுவை இருக்குமேயானால் பீடத்தின்மீது சிறுபாடுபட்ட சுரூபம் வைக்கத் தேவையில்லை.

பீடத்தின் மீதுள்ள பலிப் பொருட்கள் நம்பிக்கையாளருக்கு தென்படக்கூடாது. திருப்பலியின் தொடக்கத்தில், திருப்பீட முற்றத்தில், பல நீண்ட முகவுரைகள், வரவேற்பு நிகழ்வுகள், ஆயருக்குக்கூட வழங்குவதை தவிர்க்க வேண்டும். இங்கே திருப்பலியை நிறைவேற்றும் குருவோடு, நாம் எல்லோரும் இறைமக்கள். யாருக்கும் வரவேற்பு தேவையில்லை. இயேசுவை மட்டுமே நம் மத்தியில் வரவேற்க வேண்டும். அவருமைய பிரசன்னத்தை உணர்ந்தவுடன் நம்முடைய தகுதியின்மையை உணர்ந்தவர்களாய் மனத்துயர் வழிபாட்டுக்குச் செல்ல வேண்டும்.

பிறகு, அருள்வாக்குப் பகுதிகள், நற்செய்தி சிறிய மறையுரை ஆகியவற்றின் வழியாக இறைவன் நம்மோடு பேசுகிறார். அதற்கு





பதிலுரை பாடலின் வழியாக பதிலிருக்க வேண்டும். நம்பிக்கையாளர் அனைவருமே செபங்கள் மற்றும் பாடலின் வழியாக பதிலளிக்க வேண்டும். “செயலுக்குமுள்ள பங்கேற்பு” என்பது ஒன்றே திருவழிபாட்டுப் புதுப்பித்தளிலுள்ள முதன்மையாக அழுத்தம். பாடற்குழு இங்கே ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அவர்கள் இறைமக்களோடு இணைந்து அவர்கள் பாட உதவிபுரிய வேண்டும். சில நேரங்களில் பாடற்குழு கச்சேரியாக மாறிவிடுகிறது; மக்கள் வெறும் பார்வையாளர்களாக மாறிவிடுகின்றார்கள்; புனிதநற்கருணைக் கொண்டாட்டம் ஒரு பொது அரங்குக் கொண்டாட்டமாக மாறிவிடுகின்றது. எனவே பாடற்குழு ஆதிக்கம் செலுத்தக்கூடாது, அனைவருக்கும் தெரிந்த, பாடக்கூடிய பாடல்களையே தெரிவுச் செய்ய வேண்டும்.

இறைவார்த்தை மேடை, நற்கருணை மேடை, இவற்றை வேறுபடுத்திக் காட்டவேண்டும். இயன்ற மட்டும் இறைவார்த்தை முழக்கம் வாசக மேடையிலிருந்து வழங்கப்பட வேண்டும். நற்கருணையை தலைமை ஏற்றுநடத்துவோரோடு தாங்களும் இணைந்து பலி செலுத்துகிறோம் என்றுமக்கள்உணர உதவிபுரிய வேண்டும். சில நேரங்களில். குருக்கள் மட்டுமே புனித நற்கருணையை ஒப்புக்கொடுக் கின்றார்கள்; நாங்கள் பங்கேற்கிறோம் என்று இறைமக்கள்நினைக் கிறார்கள். இதற்கு, புகழுரை, திருப்பொழிவு செபங்கள், நற்கருணை மன்றாட்டு ஆகியவற்றின்மீது கருத்தூன்றல் (அ) மிகுந்த கவனம் செலுத்த இறைமக்களுக்கு உதவிசெய்ய வேண்டும். நற்கருணை பகிர்ந்தளிப்பு முடிந்தவுடன் பாடற்குழு பாடுவதை நிறுத்திவிட்டு, அமைதியாக தங்கள் உள்ளத்தில் வந்துள்ள இயேசுவை வரவேற்கவும் நன்றி செலுத்தவும் இறைமக்களுக்கு உதவிபுரிய வேண்டும். மீண்டும் நன்றி மன்றாட்டுக்கு பிறகு திருப்பீட முற்றத்தில் நன்றியுரை நிகழ்த்துவது, வாழ்த்துரை வழங்கி பொன்னாடைப் போர்த்துவது போன்றவைகள் தவிர்க்கப்பட வேண்டும். ஏனென்றால் இது போன்றவைகள் நம் இதயத்திற்குள் வந்துள்ள இயேசுவை மறந்து போகச் செய்கிறது. நம்முள் வந்துள்ள இயேசு நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் கண்டிப்பாக உணர வேண்டும். அப்போது, “நான் துன்பப்படுவதற்கு முன் உன்னோடு இந்த பாஸ்கா விருந்தை உண்ண ஆசை மேல்

ஆசையாய் இருந்தேன்'' என்று இயேசுகூறும் வார்த்தைகள் நினைவில் இருக்க வேண்டும். நம் ஒவ்வொருவருக்காகவும், நம் இதயத்திற்குள் வந்து நமக்கு உற்ற தோழனாக வாழ காத்துக் கொண்டிருக்கும் இயேசுவை காண வந்துள்ளோம் என்று உணர வேண்டும்.

இறுதி ஆசீரும் இறுதிப் பாடலும் முடிந்தபின், நாம் இயேசுவை நம் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்போது பவுலடியார் கூறுவதுபோல, ''வாழ்வது நானல்ல; என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே'' என்ற உணர்வை நாம் கொண்டிருக்க வேண்டும். திருப்பலி முடிந்தபின் பிறரை சந்தித்து அவர்களுக்கு வணக்கம் சொல்லும்போது, நாம் நற்கருணை ஒன்றிப்பை அனுபவித்து, பின் இயேசுவை வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டும். வீட்டிற்கு சென்றவுடன், இயேசுவை, எம்மாவூஸ் பாதையில் சந்தித்த சீடர்களைப்போல, நம்மோடுகூட இருக்கும் இயேசுவோடு பேச வேண்டும். எங்கள் வீட்டிற்கு'இதுதான் வழி' என்று அவரிடம் சொல்ல வேண்டும்; வீட்டை அடைந்தவுடன் இதுதான் என்வீடு என்று கூறி அனைவரையும் அவரிடம் அறிமுகம் செய்ய வேண்டும்; வீட்டில் யாரவது நோயுற்றிருந்தால், பிரச்சனைகளிலோ (அ) தேவைகளில் இருந்தால், அதைப்பற்றி இயேசுவிடம் சொல்லலாம்.

இயேசுவோடு எவ்வளவு வியக்கத்தக்க ஒன்றிப்புறவு வாழ்வு. இதுதான் புனித நற்கருணை நம் வாழ்வில் செய்கின்றது. நாம் உறுதியூட்டப்படுகின்றோம்; நாம் தூய ஆவியாராலும் அவரது கொடைகளாலும் கனிகளாலும் நிரப்பப்பட்டவர்களாக மாறுகின்றோம். தூய ஆவியார் வழியாக நமக்குள் வந்த உயிர்த்த இயேசுவே, உலகையும், பாவத்தையும் இறப்பையும், நோயையும். தோல்விகளையும் வெற்றி கொண்டவர். நாமும் தொடர்ந்து அண்டவரோடு ஒன்றிப்பில் வாழ்ந்தோமென்றால், நாமும் அவரோடு இணைந்து இவைகளையெல்லாம் வெற்றிகொள்ள இயலும். மேலும் திருமுழுக்கின் மெய்மைகளை உணர்ந்தவர்களாக மாறவும் வாழவும் நம்மால் முடியும். இவ்வாறு திருத்தந்தை விரும்புவதுபோல நற்செய்தி அறிவிப்பின் சீடர்களாக இருப்போம்; கூட்டொருங்கியக்கமாக வாழ்வோம்; திருச்சபையும் கூட்டொருங்கியக்கமாகும்.





# 58வது உலகத் தொடர்பு நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

சனவரி 24, 2024

## செயற்கை நுண்ணறிவும் இதயத்தின் ஞானமும் *முழுமையான மானிடத் தொடர்பாடலை நோக்கி*

அன்புள்ள சகோதரர்களே, சகோதரிகளே!

நான் அண்மையில் வெளியிட்டுள்ள உலக அமைதி நாளுக்கான செய்தியில் செயற்கை நுண்ணறிவுச் செயல்பாட்டு முறைகளின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இந்தச் செயற்கை நுண்ணறிவு, தகவல் மற்றும் தொடர்பாடல் உலகையும் நாம் வாழும் சமூகத்தின் சில அடித்தளங்களையும் முற்றிலும் பாதிக்கிறது. இம்மாற்றங்கள் இத்துறைகளில் தொழில்புரியும் வல்லுநர்களை மட்டுமல்லாமல், எல்லாரையும் பாதிக்கின்றன. இத்துறைகளின் வியத்தகு புதுமைப்படுத்துதல்கள் மிக விரைவாகப் பரவி வருகின்றன. இவற்றின் ஆற்றலும் செயல்பாடுகளும் நாம் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவுக்கு மனிதர் பலரின் புரிந்துகொள்ளும், பயன்படுத்தும் எல்லைக்கு அப்பாற்பட்டதாக உள்ளன. இவை பொதுவாக மக்களிடையே அதிக உற்சாகத்தை ஏற்படுத்தினாலும் பலரைத் திசைத் திருப்புவதாகவும் உள்ளன. மனிதர் ஒவ்வொருவரின் இயல்பு, தனித்தன்மை, அவர்களின் தன்னுரிமை, எதிர்காலத்தில் மனிதரின் அறியுந்திறம் போன்ற மானுடத்தின் மிக அடிப்படையான கேள்விகளுக்கு செயற்கை நுண்ணறிவு நம்மை இட்டுச் செல்கின்றது. முழுமையான மனிதர்களாக இருந்துகொண்டு நல்ல ஒரு நோக்கத்திற்காக இக்கலாச்சார மாற்றத்தை எவ்வாறு வழிநடத்த முடியும் என்பது இன்றைய முக்கிய கேள்வியாகும்.

### இதயத்தில் இருந்து தொடங்கி

அனைத்திற்கும் முன்பு, பேரழிவு குறித்த கணிப்புக்களையும் அவை விளைவிக்கும் தடுமாற்றங்களையும் நாம் ஒதுக்கிவைக்க வேண்டும். நூறு ஆண்டுகளுக்குமுன் ரோமானோ குவார்தியானி என்பவர் *தொழில்நுட்பமும் மானுடமும்* என்றப் பொருளில் சிந்தித்தார். காலப்போக்கில் காணாமல் போவதற்கென்றே குறிக்கப்பட்ட அழகான இன்றைய உலகை பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவே, ''புதிதாகத்'' தோன்றும் எதையும் மறுத்து ஒதுக்கக்கூடாது என அவர் நம்மை எச்சரித்தார். அதே வேளையில் அவர் இறைவாக்குத் தன்மையோடு

நம்மை பின்வருமாறு எச்சரித்தார்: “நாம் அனைவரும் தொடர்ந்து மாற்றத்திற்கான செயல்முறைகளில் ஈடுபட்டுள்ளோம். நாம் ஒவ்வொருவரும் அவரவருக்கு உரியவிதத்தில் மாற்றத்திற்கான இச்செயல்முறைகளில் திறந்த மனதோடும், இவற்றில் உள்ள அழிவுக்கும் மனிதத்தன்மைக்கு மாறானதுமான செயல்பாடுகளை உணர்ந்தவர்களாகவும், இவற்றில் ஈடுபட்டாகவேண்டும்”. அவர் மேலும் பின்வருமாறு கூறி முடித்தார்: “இவையனைத்தும் அறிவியல், தொழில்நுட்பம், அரசியல் சார்ந்த பிரச்சனைகள் எனினும் மனிதரிடமிருந்தே தொடங்கினாலன்றி இவற்றிற்குத் தீர்வுகாண முடியாது. ஆழ்ந்த ஆன்மீகமும், புதிய தன்னுரிமையும், ஆழ்ந்த உள்நோக்கும் கொண்ட ஒரு புதிய மானிடத்தை நாம் உருவாக்கவேண்டும்”.

தொழில்நுட்பத்தில் சிறந்தவர்களாகவும் மனிதத் தன்மையில் ஏழ்மையானவர்களாகவும் மானுடம் மாறிக்கொண்டிருக்கும் ஒருபெரும் சவாலை இன்றைய நமது வரலாறு சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. இச்சூழலில் நமது சிந்தனைகள் மனித இதயத்திலிருந்து தொடங்கவேண்டியது மிக அவசியம்”. உலகை ஓர் ஆன்மீக கண்ணோட்டத்தில் பார்க்க முற்படுவதாலும் இதயத்தின் ஞானத்தை மீட்டெடுத்தலாலும் மட்டுமே நாம் வாழும் இக்காலத்தின் புதுமைத் தன்மையை எதிர்கொள்ளவும், அதற்கு விளக்கம் கூறவும் இயலும். இவ்வாறு முழுமையான மனித தொடர்பாடலுக்கான வழியை மீண்டும் கண்டு பிடிக்கமுடியும். விவிலியத்தில் இதயம் என்பது தன்னுரிமையோடு முடிவெடுக்கும் இடமாகக் காணப்படுகிறது. மனித வாழ்வின் நேர்மை, முழுமை, ஒன்றிப்பு, உள்ளார்ந்த அமைதி ஆகியவற்றின் அடையாளமாகவும் இதயம் அமைந்துள்ளது. அதே வேளையில் இந்த இதயம் உணர்வுகள், விருப்பங்கள், கனவுகள் ஆகியவற்றில் நம்மை ஈடுபடச் செய்கின்றது, அனைத்திற்கும் மேலாக இந்த இதயம் நாம் உள்ளார்ந்த விதத்தில் கடவுளைச் சந்திக்கும் இடமாகவும் விளங்குகிறது. உலகின் ஒவ்வொரு பகுதியையும் அதன் முழுமையுடனும், நாம் எடுக்கும் முடிவுகளையும் அவற்றின் பின் விளைவுகளையும், நமது பெருந்தன்மையையும், அதன் தற்காப்பற்ற நிலைமையையும், நமது கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும், நமது தனித் தன்மையையும், பரந்துபட்ட சமுதாயத்தில் நாம் உறுப்பினர்களாய் இருப்பதையும் ஒருங்கிணைக்கும் ஆற்றலே இதயத்தின் ஞானம் எனப்படுகிறது. இதயத்தின் இந்த ஞானத்தை தேடுவோர் அதனைக் கண்டடைவர். ஞானம் ஒளிமிக்கது. மங்காதது. அதன்பால் அன்பு கூறுவோர் இதைஎளிதில் கண்டுகொள்வர். அதைத் தேடுவோர் கண்டடைவர். தன்னை நாடுவோருக்கு அது தன்னையே





விரைந்து வெளிப்படுத்தும். (*காண்க.* சாலமோனின் ஞானம் 6:12-16). பிறருடைய அறிவுரைகளை ஏற்போரிடம் ஞானம் காணப்படும். (*காண்க.* நீதிமொழி 3:10). நன்மை தீமைகளைப் பகுத்தறிய ஞானம் தேவை. (*காண்க.* 1 அரசர் 3:9). ஆவியாரின் கொடை என்ற விதத்தில் ஞானம் இவ்வுலகையும் அதில் உள்ள தொடர்புகளையும் சூழல்களையும் நிகழ்வுகளையும் கடவுளின் பார்வையில் காணும் ஆற்றலை மனிதருக்குத் தருவதால் மனிதர் மேற்கூறிய அனைத்தின் பொருளையும் உணர்ந்துவாழ இயலும். இத்தகையஞானம் இல்லாமல் வாழ்வு சுவையற்றதாகிறது. ஏனெனில் ஞானம் என்பதன் மூல இலத்தீன் வினைச் சொல்லாகிய *சப்பேரே* என்பதற்கு அறிதல் மற்றும் சுவைத்தல் என்றும், *சாப்போர்* என்றப் பெயர்ச்சொல்லுக்கு “சுவை” என்றும் பொருள் கொள்ளலாம். இதனால் ஞானம் வாழ்வை நாம் சுவைக்கச் செய்கிறது எனலாம்.

**வாய்ப்பும் ஆபத்தும்**

இத்தகைய ஞானத்தை இயந்திரங்களிடம் தேட முடியாது. “செயற்கை நுண்ணறிவு” என்ற பெயர் இப்போது “இயந்திரங்களினால் அறிதல்” என்ற புதிய பெயரில் அறிவியல் இலக்கியங்களிலும் வழக்கிலும் பயன்பாட்டில் உள்ளது. “நுண்ணறிவு” என்ற சொல்லின் பயன்பாடு நம்மை தவறாக வழிநடத்தும் வாய்ப்பு உள்ளது. தகவல்களைச் சேகரிக்கவும், அவற்றைச் சேமித்து வைக்கவும், அவற்றைத் தொடர்புபடுத்தவும் மனிதரைவிட இயந்திரங்கள் அதிக எல்லையில்லாத ஆற்றல் கொண்டிருந்தாலும், மனிதர் மட்டுமே அவற்றை அர்த்தமுள்ளதாக்க முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய இயந்திரங்களை மனிதர்களைப் போன்று இருக்கச் செய்தல் இன்று முக்கியப் பணியல்ல. மனிதர் முழுமையான தன்னாட்சி உரிமை கொண்டவர்கள், தம் நம்பிக்கையின் அடிப்படையில் சமூக உறவுகளிலிருந்து விடுபட்டவர்கள், என்றும் மனிதர் எல்லோரும் படைக்கப்பட்டவர்கள் என்ற நிலையை மறந்து வாழும் மாயை நிலையிலிருந்தும் மனிதரை எழுப்பிவிட வேண்டியுள்ளது. மனிதர் தாம் தன்னிறைவு கொண்டவர்கள் அல்ல என்பதை உணர்ந்து தம்மிடமுள்ள இந்தத் தற்காப்பற்ற நிலையை ஏதாவது ஒரு வழியில் மேற்கொள்ளவும் எப்போதும் முயன்று வந்துள்ளனர். முற்காலத்தில் கலைப் பொருட்களையும், அதற்குப்பின் ஆயுதங்களையும், பின்னர் பேசப்பட்ட வார்த்தைகளையும், அதற்குப்பின் இயந்திரம் சார்ந்த ஊடகங்களையும் இதற்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இவ்வாறேமனித மூளைக்கு சிந்திக்க உதவிபுரியும் ஆற்றல் வாய்ந்த அதிநவீன எந்திரங்களையும் கண்டுபிடித்துள்ளனர். எனினும் இந்தக் கருவிகள் எல்லாமே நான்

கடவுளைப் போல் ஆகவேண்டும். கடவுள் இல்லாமல் நான் இருக்க முடியும் (தொடக்க நூல் 3) என்ற தொடக்கக் காலச் சோதனைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. அதாவது கடவுளிடமிருந்து பெறப்பட்டு பிறரோடு பகிர்ந்து மகிழ வேண்டிய ஒன்றை, நாம் நம் சொந்த முயற்சியாலே உருவாக்கிப் பிறரிடம் பகிர்ந்துகொள்ள விரும்புவதாகும்.

நமது இதயத்தின் விருப்பத்திற்கேற்ப நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் நமக்கு ஒரு வாய்ப்பாகவோ அல்லது அச்சுறுத்தலாகவோ அமைகின்றன. பிறருடன் தொடர்பில் இருப்பதற்கும், பிறருடன் ஒன்றித்து வாழவும் படைக்கப்பட்ட நமது உடல்கூட வன்முறைக்கு ஒரு வழியாகும் வாய்ப்புள்ளது. அவ்வாறே மானுடத்தின் ஒவ்வொரு தொழில் நுட்ப நீட்சியும் அன்புப் பணி செய்யவும் உதவும், அல்லது விரோத ஆதிக்கத்திற்கும் வழிவகுக்கும். இவ்வாறே செயற்கை நுண்ணறிவுத் திறனும் அறியாமையைப் போக்கும் சிறந்தக் கருவியாகவும், பல மக்களிடையேயும் தலைமுறையினரிடையேயும் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் கருவியாகவும் அமையலாம். எடுத்துக்காட்டாக ஒரேமொழியை அறிந்திடாத பல மக்கள் முற்காலத்தில் எழுதப்பட்ட அளவிட முடியாத அறிவுக் களஞ்சியங்களை பெற்றுக் கொள்ளவும் செயற்கை நுண்ணறிவுத் துணைபுரியும். ஆயினும் அதே வேளையில் அவை “அறிவாற்றல் மாசுபாட்டின்” ஊற்றாகவும் அமையலாம். ஓர் உண்மையை பாதியாகவோ அல்லது முற்றிலும் திரித்தோ விவரிப்புகளை நம்புவதற்குரிய வழிகளில் இவை உண்மை எனவும் ஒளிபரப்பப்படும்போது இத்தீமை நிகழ்கிறது. போலியான செய்திகளை தவறாகப் பரப்பும் முறைநீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. இன்றும் நம்பத் தகுந்த, மிகவும் ஒத்து இருக்கக்கூடிய, ஆனால் தவறான அமைகைகளைக் கொண்டு “ஆழமான போலிகளை” உருவாக்குதல் நிகழ்ந்து வருகின்றன. நானும் இச்செயல்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளேன். இவ்வாறுகுரல் செய்திகளில் ஒருமனிதரின் குரலைப் பயன்படுத்திஅவர் சொல்லாத ஒன்றைஅவர் சொன்னதாகச் செய்திப் பரப்புதலும் நடைபெற்று வருகிறது. பாவனை தொழில்நுட்பம் சிலதுறைகளில் சிறிதளவு பயன்படலாம் எனினும் அதுவே உண்மைக்கு புறம்பானதாகவும் பிறரிடம் நமக்குள்ள உறவுகளை முறிப்பதாகவும் அமையும்போது அது மிகவும் தவறானதாகவும் விபரீத விளைவுகளை உருவாக்குவதாகவும் அமைகிறது.

சமூக ஊடகங்களில் செயற்கை நுண்ணறிவின் முதல் அலைபாய்ந்தபோது அதன் இருமுகப்போக்குத் தன்மையைநாம் அனுபவித்தோம். அதில் சில சாத்தியக் கூறுகளையும் கண்டோம். அதே வேளையில் அதன் நோயுற்றத் தன்மையையும் கண்டுணர்ந்தோம். செயற்கை நுண்ணறிவின் இரண்டாம் அலையில் அது மிகப்பெரும்





படைப்பாற்றல் கொண்டெழுந்தது. இது ஓர் “ஏற்றமிகு மாற்றமாகக்” கருதப்பட்டது. இவ்வேளையில் ஆற்றல்மிகு கருவிகள் தவறான கரங்களால் உபயோகிக்கப்பட்டால் குழப்பமிகு சூழ்நிலைகள் உருவாகும். நாம் அனைவரும் இவற்றை அறிந்துணரவும் பாராட்டவும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை உணர்வது மிக அவசியம். மனித அறிவின் மற்றச் செயலபாடுகள், திறமைகள், ஆற்றல்கள் போலவே அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளும் நடுநிலையானவையல்ல. எனவே இவற்றின் பயன்பாட்டைக் குறித்து மிகவும் வருமுன் காக்கும் மனப்பான்மையுடன் செயல்படவேண்டியுள்ளது. அறநெறி வழிமுறைகளுக்கு உட்பட்டுச் செயற்கை நுண்ணறிவு செயல்பட்டால் தீமையான பாகுபாடுகளை உருவாக்கும் சமுக அநீதிகளைத் தோற்றுவிக்கும் தவறாகப் பயன்படுத்தப்படும் செயல்பாடுகளை முன்னரே தவிர்க்கலாம். இதனால் செயற்கை நுண்ணறிவின் விளைவுகளாகிய பன்மைத் தன்மைக் குறைதல், பொது எண்ணத்தை துருவப்படுத்துதல், சிறுகுழுச் சிந்தனைகளை உருவாக்குதல் போன்றவற்றைத் தவிர்க்கலாம். பன்னாட்டு சமூகத்திற்கு நான் அறைகூவல் விடுக்கின்றேன். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது, அதை மேம்படுத்துவது குறித்து எல்லாரையும் கட்டுப்படுத்தக்கூடிய பல்வேறு வடிவங்களில் பன்னாட்டு ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் உருவாக்கப்படவேண்டும். அதே வேளையில் மனிதர்களின் சூழ்நிலைகளில் ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துவது மட்டுமே போதாது.

### மானுடம் வளர்த்தல்

